**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2020, 2001, 2022**

---

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்.**

| 1கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைகின்ற ஒவ்வொரு ஆண்டிற்காகவும் மன்றத்தின் நிதிக் கூற்றுக்கள் அதன் பின்னர் அடுத்துவரும் பெப்ரவரி மாதத்தின் இறுதித் திகதிக்கு பிந்தாத தினமொன்றில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பித்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 372(2)(இ) பந்தி | வழங்கப்பட்ட உப கட்டுநிதி உரிய பணிகள் நிறைவுபெற்றவுடன் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வழங்கப்பட்ட ரூபா1,004,938 கூட்டுத்தொகையான முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | அதற்குரிய உத்தியோகத்தர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகளை வழங்காதிருந்தமையால் அவர்களின் பணிக்கொடை கொடுப்பனவிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை | வழங்கப்பட்ட முற்பணம் நிதிப்பிரமாணத்திற்கு இணங்க தீர்த்துவைப்பதற்கு விரைவாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்கவில்லை | எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயம் | | | |
| (i) | 2.1 ஆம் பந்தி | மன்றத்திற்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைத் தயாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது வெளி ஆலோசனையாளர் ஒருவருக்கு ரூபா 150,000 தொகை செலுத்தப் பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து 2023 திசெம்பர் 07 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 4.2.1 ஆம் பந்தி | மன்றத்திற்கான வழிகாட்டி தயாரிக்கப்படும்வரை தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்ற வேண்டுமென முகாமைத்துவ சபை தீர்மானித்திருக்கும் போது 2021 ஆம் ஆண்டின் போது மன்றத்தின் கணக்காளர் பதவிக்காக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | மன்றத்தின் கணக்காளர் பதவிக்காக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் நியமனம் எமது நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் மூலம் நிருவகிக்கப்படுகின்றமையால் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மீண்டும் பதவிநிலை பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் போது அமைச்சு செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்படும். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 5.2.6 ஆம் பந்தி | மன்றத்தின் கணக்காளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுச் சபை தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மன்றத்தின் 03 உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்களாக நியமிக்கப்படடிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது முன்னாள் இருந்த மன்றத்தின் உத்தியோகத்தர்களின் தவறினால் ஏற்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் நடைபெறுகின்ற நேர்முகப் பரீட்சைகளின் போது சரியான நடவடிக்கைகள் பின்பற்றப்படும். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள். | மன்றத்தின் நோக்கங்களை செயற்பாட்டிற்குக் கொண்டுவரும் போது அதிகாரம், பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் தேவையாக இருக்கக்கூடிய தீர்மானங்களை எடுத்தல் மற்றும் மீளாய்வினைச் செய்வதற்காக மன்றத்தின் முகாமைத்துவ சபை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கூறப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோயின் காரணமாக முகாமைத்துவ சபைக் கூட்டங்களை நடாத்துவதற்கு சராசரியான பிரகாரம் அலுவலகங்களை பேணிச் செல்வதற்கு முடியாதிந்தமை காரணமாக இருந்தது. | முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் Zoom தொழில்நுட்பம் ஊடாக அல்லது காணப்படுகின்ற நிறுவன வசதிகளின் பிரகாரம் தேவையான தீர்மானங்கள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 4.2 ஆம் பந்தி | 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்காமல் ரூபா 71,216,514 பெறுமதியான மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான மூலதனச் செலவினத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்படா திருந்தமையால் பெறுகைத் திட்ட மொன்று தயாரிக்கப்படவில்லை | அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் மன்றத்தின் மூலதனச் செலவினங்கள் செய்யப்படுகின்றமையால் வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1.2.1(ஈ), 2.5.1 (ஆ), (இ), (ஈ) 2, 2.6.1(அ) (i), (ii), (iv), 2.11.3 (அ), 2.14.1, 4.2.2, 4.3.1, 5.1.1 (ஆ), (ஆ), 5.3.3, 5.3.10, 6.2.1(இ), 8.9.1(ஆ), 8.12.3 ஆம் பிரிவுகள் | பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணாக ரூபா 7,888,800 பெறுமதியான 180 உபகரணத் தொகுதிகள் 2021 ஆம் ஆண்டின் போது தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சிகள் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த உபகரணத் தொகுதிகள் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமை மற்றும் போக்குவரத்து கஷ்டங்களின் அடிப்படையில் பொருட்களின் பற்றாக்குறையினால் நடைமுறையில் பெறுகைக்கால அட்டவணையைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. இந்தப் பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அமைச்சு செயலாளரினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகைள் வழிகாட்டிகளுக்கு இணங்க கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | 1.2.1 (இ), 4.2.2(அ), (ஆ), 5.4.8 (அ), (ஆ) 6.3.3 (ஆ), 8.7.1 (ஆ) பிரிவுகள் | பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணாக ரூபா 1,519,486 பெறுமதியான செலவினத்திற்கான வெதுப்பகம் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக தோட்டங்களின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்கில் அந்த காலப் பகுதியில் போக்குவரத்து மற்றும் பொருட்களை வழங்குவதில் காணப்பட்ட | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கஷ்டத்தினால் பிரயோக ரீதியில் மேற்கொள்ள வேண்டிய முறையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறவைகள் மேற்கொள்ளாதிருப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை கிடைத்தவுடன் உரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரைவு ஆண்டறிக்கை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம் 01/2014 என்ற அரச நிதி சுற்றறிக்கை | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | அமைச்சு செயலாளரால் உரிய பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதிய இலக்கம் 02/2020 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 56 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2021 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக சம்பளமாக கூட்டுமொத்தமாக ரூபா22,532,331 தொகையும், 2022 ஆம் ஆண்டிற்காக | 2020 பெப்ரவரி மாதம் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தை மீண்டும் ஸ்தாபித்ததன் பின்னர் நிறுவனத்தின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேவையின் அடிப்படையில் முன்னாள் இருந்த | ஊழியர்களை சேர்க்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரூபா29,037,151 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் 2(viii) பிரிவின் பிரகாரம் ஆரம்ப சேவை தொகுதியில் 31 பதவிகளுக்காக தேவையான ஊழியர் தரப்பினர் பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினப் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,415,894 ஆகும். அதில் ரூபா 2,990,646 தொகை 03 வருடங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்கு உரியதாகவும், ரூபா 7,425,248 தொகை 07 வருட காலத்தையும் விஞ்சி காணப்பட்டது. | செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்த்து வைப்பதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 88,082,234 செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டதுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற அதாவது கடன்கொடுத்தோர் மீதி ரூபா 83,991,218 ஆகும். அந்த மீதியில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளுக்காக ரூபா 72,240,700 தொகை செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்காக 2020 திசெம்பர் 01 | இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக சில தடவைகள் கடிதம் அனுப்பப்பட்ட போதும் அநேகமான கடிதங்கள் அந்த நிறுவனம் மூடப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டு மீண்டும் எங்களுக்கு கிடைத்துள்ளது. இந்த கடன் கொடுத்தோர் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பித்து மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் தேவையான வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாடு பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டு நிலுவைப் பணத்தை தீர்த்துவைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கா அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரம்பொட தொண்டமான் கலாசார நிலையத்தை நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 7,544,265 தொகை மீளாய் வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆணடு வரையில் ரூபா 25,678,995 செலவிடப்பட்டிருந்த போதிலும் உரியவாறு பூர்த்தி செய்யாமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2023 ஒக்டோபர் 31 வரையும் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சில வளங்களில் காணப்பட்ட பற்றாக்குறையினால் நிதி ஏற்பாடுகள் உரிய நேரத்தில் கிடைக்காமையின் அடிப்படையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு முடிதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | வளங்களை சிக்கனமாக செயற்திறனாகவும், ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையான காலத்தில் கள தொடர்பு படி செலுத்துவதற்காக மன்றத்தால் வழங்கப்பட்ட பணத்தை பயன்படுத்துவதற்குரிய 2013 யூலை 24 ஆம் திகதிய ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் உரிய ஊழியர்களிடமிருந்தும் மேலும் அரவிட வேண்டிய ரூபா 3,202,500 தொகையை அறவிடுவதற்காக தேவையான | சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக நுவரேலியா குற்றப்புலனாய்வு பணியகத்தால் அதற்காக உரிய மிகுதி சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தின் கீழ் நடாத்திச் செல்கின்ற தொண்டமான் பயிற்சி நிலையத்தில் 07 பாடநெறிகளுக்காக 2018 முதல் 2022 வரையான காலத்திற்கு உரியதாக சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 130 படியாக இருந்ததுடன் மாணவர்களை கவர்ந்து கொள்ளும் முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 79, 68, 87, 65 ஆக இருந்ததுடன் அதில் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கபட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடும் போது சதவீதமாக எடுப்போமாயின் முறையே 61 சதவீதம், 52 சதவீதம், 67 சதவீதம் மற்றும் 50 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.<br>2020 ஆம் ஆண்டில் 03 பாடநெறிகளும், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கு உரியதாக 08 பாடநெறிகளுக்கும் பரீட்சைகளை நடாத்துவதற்கு 2023 செப்டம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக 2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 366 மாணவர்களில் 260 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைதல் அல்லது பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்ததுடன் அது சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 71 சதவீதம் ஆகும். 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நடாத்தப்பட்ட 14 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட 296 | மாணவர்களை பதிவு செய்யும் போது தகைமை பெறாத மாணவர்கள் சேர்க்கப்படாதிருந்தமையும் கொவிட் தொற்று நோயின் காரணமாக செய்முறைப் பரீட்சைகள் உரிய நேரத்தில் நடாத்தப்படாமை மற்றும் பொருளாதர நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் மாணவர்கள் வகுப்புகளுக்கு வருகை தரல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையினால் முறையான பிரகாரம் பாடநெறிகளை பின்பற்றுவதற்கு அந்தக் காலப் பகுதியில் முடியாமையினால் பரீட்சைகளில் சித்தியடைதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | சேர்த்தலை உரிய பிரகாரம் மேற்கொண்டு பரீட்சைகளை நடாத்தி குறித்துரைத்த காலத்தில் பெறுபேறுகளை விநியோகிக்க வேண்டியிருந்ததுடன் பரீட்சைகள் சித்தியடைதல் ஆக்கபூர்வமான மட்டத்தில் பேணிச்செல்லப்பட வேண்டும். பாடநெறிகளை விட்டு செல்வதைக் குறைத்துக்கொள்வதற்காக சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாணவர்களில் 102 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டு சென்றிருந்தனர். ஓவ்வொரு பாடநெறிகளாக எடுக்கும் போது 18 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (இ) | பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக தனியார் நிறுனங்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணம், சுயதொழில் முயற்சிகளுக்காக வெளித்தரப்பினர்களுக்கு வழங்க வேண்டிய கடன், பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்த கடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடமிருந்து அறவிடவேண்டிய பணமாக 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 16,337,893 கூட்டுத் தொகையான பெறவேண்டிய மீதி 2023 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை அறவிடுவதற்காக கடிதம் அனுப்பப்பட்ட போதும் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்கான தேவையான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தொண்டமான் விளையாட்டுத் கட்டிடத் தொகுதி, தொண்டமான் கலாசாரத் தொகுதி மற்றும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணிகளின் உரித்து மன்றத்தின் பெயரில் கையேற்பதற்கும் ஒவ்வொரு காணியினதும் பெறுமதியை மதிப்பிட்டு பெறுமதியை தனித்தனியாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. 35 பிரஜா சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது காணி அளத்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ரூபா 2,359,298 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைின் உரித்தை கையேற்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 35 பிரஜா சக்தி நிலையங்களை நிர்மானிப்பதற்கான அளத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதி இலக்கம் பீடீஈ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 பிரிவில் குறிப்படப்பட்டதன் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர் சபை கூட்டங்களின் போது நிறுவனத்தின் இருப்பு தொடர்பாக முக்கியமாக கருதப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவேண்டும் என காண்பிக்கப்பட்ட போதிலும் சௌமியமூர்த்தி தொடண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் முகாமைத்துவ சபை 2020 ஆம் ஆண்டின் போது 02 தினங்களில் மாத்திரம் கூட்டம் நடாத்தியிருந்தது. இதன் காரணமாக மன்றத்தின் நோக்கம் மற்றும் கொள்கை ரீதியான தீர்மானங்களை அடைந்து கொள்வதற்காக மன்றம் செயற்பட்டிருக்கவில்லை. | முன்னாள் இருந்த கௌரவ அமைச்சின் விருப்பத்தின் காரணமாக முகாமைத்துவ சபைக் கூட்டங்களை காலம் தாழ்த்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபை கூட்டங்களை உரிய பிரகாரம் நடாத்தி நிறுவனத்தின் நோக்கத்திற்கு தேவையான தீர்மானங்கள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | சுய தொழில் கடன் திட்டத்தின் கீழ் பிரஜா சக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக 2014 திசெம்பர் 01 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 736,000 பெறுதியான சீமெந்து புளக்கல் இயந்திரங்கள் 08 சுயதொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது. | விரைவாக செயற்றிட்டத்தை ஆரம்பித்து குறைவான பயன்பாட்டுடன் உள்ள சொத்துக்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | டயகம மற்றும் வட்டடிகாட பிரஜா சக்தி நிலையங்கள் ஒரு செயற்திட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,536,283 ஆன கோழிவளத்தல், ஆடு வளர்த்தல் மற்றும் மலர்ப் பயிர்ச் செய்கை மற்றும் பொலித்தீன் வீடு சார்ந்த 02 பயிர்ச்செய்கை செயற்திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 3,687,620 செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த 02 செயற்திட்டங்களும் கைவிடப்பட்டதன் காரணமாக 2023 ஒக்டோபர் வரையிலும் செலவிடப்பட்ட ரூபா 10,001,629 ஆன மொத்த தொகையும் | இந்த 02 செயற்றிட்டங்களும் முழுமையாக கைவிடப்படாதிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக வேலை நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் டயகம செயற்றட்டம் தனியார் நிறுவனத்துடன் இணைத்துக் கொள்வதற்காக தற்போது கலந்துரையாடல் நடாத்தப்படடிருந்ததுடன் இந்த ஆண்டின் முதல் காலாண்டின் போது அதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் திடடமிடப்பட்டுள்ளது. | கணிசமான நோக்கங்கள் அநேகமானவை நிறைவேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்திற்காக செலவிடப்பட்ட நிதி பயனற்ற செலவினத்திற்கு உட்படுவதற்கு இடமளிக்காமல் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |
| (ஏ) | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,343,884 ஆன ‘‘சாலை ஓரம்’’ என்ற பெயரில் உணவகமொன்றை நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,519,486 தொகை ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக காணிக்கு உரிய மின்சார சபையின் அங்கீகாரம் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் கிடைக்காமையினால் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,519,486 செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | இந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இல்லாதிருந்ததுடன் அது இந்தச் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் வேறு அநேகமான பணிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டத்தை பயன்படுத்த முடியும். உரிய பிரதேச செயலாளரால் 2021 செப்டெம்பர் 27 ஆம் திகதி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் போது மேல் கொத்மலை நீர்மின்சார செயற்திட்டத்தின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை ஏற்படவில்லை. | செலவிடப்பட்டுள்ள செலவினங்களுடன் ஒப்பிடும் போது நிர்மாணிக்கப்பட்டுள்ள உரிய கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | ரூபா 7,888,800 பெறுமதியான 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த 05 பாடநெறிகளுக்கு உரியதாக மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 99 உபகரணத் தொகுதிகளில் 69 தொகுதிகள் வெளி நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததுடன் பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளும் வயது எல்லை 16 வயதிற்கும் 25 வயதிற்கும் இடையிலாக இருந்த போதிலும் உபகரணத் தொகுதிகளை பகிர்ந்தளித்த வெளி நபர்கள் 69 பேர்களில் 30 பேர்களின் வயது எல்லை 36 வயது தொடக்கம் 51 வயது வரையான வீச்சில் காணப்பட்டது. உபகரண தொகுதிகளைப் பகிர்ந்தளிக்கும் போது நலனாளிகளுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் கையொப்பம், நலனாளிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப கோரிக்கைக் கடிதங்கள் மற்றும் பொருட்கள் கையேற்கும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட | இந்த உபரணத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளைப் பெற்ற மாணவர்களுக்காக இருந்த போதிலும் இந்த செயற் திட்டம் முன்மொழிவு தயாரிக்கப்படுகின்ற சந்ர்ப்பம் வரையிலும் இந்த உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் சுயதொழில் வாய்ப்பிற்காக அந்த பயிற்சி பெற்ற மாணவர்களின் விருப்பம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக அங்கீகாரம் கிடைத்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் எந்தவொரு சிறுது காலம் எடுத்தமையினால் அதனை பகிர்ந்தளித்த சந்தர்ப்பத்தின் போது அந்த மாணவர்கள் சமர்ப்பிக்காமையினால் அது மற்றும் சமமான பயிற்சி கிடைக்கப்பெற்ற சுயதொழில் வாய்பை நோக்காகக் கொண்டு காணப்படுகின்ற நபர்களுக்காக உகரணங்கள் பகிர்ந்தளிக்க வேண்டி ஏற்பட்டது. தோட்டத்தில் வாழ்கின்ற குறைந்த வருமானம் பெறும் மக்களில் | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது உரிய சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு தேவையான பிரகாரம் இனங்கண்டு குறித்துரைத்தபடி பொருட்களைக் கொள்வனவு செய்து பகிர்ந்தளித்தல் மேற் கொள்ளப்படல் வேண்டும். அரசாங்கத்தின் நிதியினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கையொப்பங்களுடன் இணங்காதிருந்த 40 சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. ரூபா 96,000 பெறுமதியான 02 தையல் இயந்திரங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் உபகரண தொகுதிகளை பகிர்ந்தளித்ததன் பின்னர் அதனை பயன்படுத்தி சுய தொழில் வாய்ப்புகளில் ஈடுபடுதல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட 180 உபகரணத் தொகுதிகளில் 76 தொகுதிகள் தொடர்பாக எந்தவொரு மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களுக்காக கையொப்பம் இடும் போது மிகவும் அதிக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் கையொப்பம் இடும் போது சிறுது வேறுபாடுகள் காணப்பட முடியும். இதில் எஞ்சியுள்ள தையல் இயந்திரங்கள் இரண்டினையும் வழங்கும் போது காணப்பட்ட நபர்களின் விபரங்கள் கூடிய விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்த 76 நலனாளிகளையும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தமையினால் மீளாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் 2020 ஆம் ஆண்டின் போது சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாமையினால் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என பரீட்சிப்பதற்கு கணக்காய்வில் முடியாதிருந்ததுடன் மன்றத்தில் 2023 ஆம் ஆண்டின் போது அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிக்காக தேவையான தகைமைகளையும் அந்த உத்தியோகத்தர் பூர்த்தி செய்திருக்கவில்லை. | கௌரவ அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட நியமனம் ஆனமையால் புதிய பதவியணியினர் அங்கீகாரம் கிடைக்கும் வரை தற்காலிகமாக எதிர்காலத்தில் வைத்துக்கொள்ளுதல் மன்றத்தின் நோக்கமாக இருந்தது. | முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து அதனை அங்கீகரித்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். |